# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2352/03 - 2023 ඔක්තෝබර් මස 02 වැනි සඳුදා - 2023.10.02

*2352/03 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

இந்த QR குறியீட்டை Scan செய்து பதிவு விபரங்களைப் பார்வையிட முடியும். அல்லது ec.lk/vrd எமது இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.

**தேருநர் இடாப்பு மீளாய்வு**

தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் பிரகாரம் 2023(3) ஆம் குறைநிரப்பு பட்டியலைக் காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல் தொடர்பாகத் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தல்

**வரைவிலக்கணம்**

| | | |
|---|---|---|
| 01. | "தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம் - | 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம். |
| 02. | "2023(3) குறைநிரப்புப் பட்டியல்" - | 2023, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி முதல் 2024, சனவரி மாதம் 31 ஆந் திகதிவரையான காலப்பகுதியினுள் ஒரு தினத்தில் 18 வயதைப் பூர்த்திசெய்யும் மற்றும் 2023(3) குறைநிரப்பு தேருநர் இடாப்பிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் குறிப்பிடப்படும் பட்டியல். |

**குறைநிரப்புப் பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள்**

| | காட்சிப்படுத்தப்படும் இடம் | காட்சிப்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருக்கும் பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகள் |
|---|---|---|
| 01. | ஒவ்வொரு மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | குறித்த தேர்தல் மாவட்டத்தின் மொத்த குறைநிரப்புப் பட்டியல்களின் பிரதி |
| 02. | ஒவ்வொரு பிரதேச செயலகம் | குறித்த பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களும் குறிப்பிடப்பட்டுள்ள குறைநிரப்புப் பட்டியல் |

| காட்சிப்படுத்தப்படும் இடம் | காட்சிப்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருக்கும் பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகள் |
|---|---|
| 03. ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனம் | குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ள குறைநிரப்புப் பட்டியல் |
| 04. ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகம் | குறித்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களும் குறிப்பிடப்பட்டுள்ள குறைநிரப்புப் பட்டியல் |

**அறிவுறுத்தல்கள்**

01. தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கமைய 2023 (3) குறைநிரப்புப் பட்டியல்கள் தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்தப் பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகளை அலுவலக நேரத்தில் மேற்குறிப்பிடப்பட்ட காட்சிப்படுத்தப்படும் இடங்களில் பொது மக்கள் பரிசீலிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளதாகவும், இங்கு கீழுள்ள அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்காக அதன் II ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உதவிப் பதிவு அலுவலரால் 2023.10.02 ஆந் திகதி குறைநிரப்புப் பட்டியல்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 20அ(5) ஆம் உப பிரிவின் கீழ் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலர் சார்பாக அறியத்தரப்படுகின்றது.

02. தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கமைய 2024.01.31 ஆந் திகதியன்று பதினெட்டு வயதைப் பூர்த்திசெய்யும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுடன் தொடர்பான குறைநிரப்பு தேருநர் இடாப்பில் தனது பெயர் அல்லது வேறு நபரொருவரின் பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்குத் தகைமையைப் பெற்றுள்ள ஆனாலும் குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிராத எவரேனுமொருவர் தனது பெயரை அல்லது வேறு நபரொருவரின் பெயரை குறைநிரப்பு தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக் கொள்வதற்கு சந்தர்ப்பத்திற்கேற்பதான அல்லது தனக்குப் பதிலாக வேறொருவரால் உரிமை கோரப்படுமாயின், அவ்வாறு உரிமைக் கோருபவர்களால் அதுபற்றி மேற்குறிப்பிடப்பட்ட தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள "அ" மற்றும் "ஆ" படிவத்திற்கமைய அல்லது வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள லூஊ படிவத்தினூடாக அல்லது பிறப்புச் சான்றிதழின் அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றுடன் 2023, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி முதல் 10 நாட்களுக்குள் அதாவது 2023, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இதற்கான அனைத்து விண்ணப்பங்களும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலருக்கு (மாவட்ட தேர்தல்கள் அலுவலகம்) கிடைக்கப்பெறச் செய்தல் வேண்டும்.

03. தேர்தல் மாவட்டத்துடன் தொடர்பான குறைநிரப்புப் பட்டியலில் தனது பெயர் உள்ளடக்கப்பட்டுள்ள ஒருவருக்கு, தனது பெயர் அல்லது அந்தப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேறு ஒருவரின் பெயர் அந்த இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிருத்தல் தொடர்பாக ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்கு முடியும். அவ்வாறு தெரிவிக்கப்படும் ஆட்சேபனைகள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் "இ" படிவத்திற்கமைய இரு பிரதிகளில் தேர்தல் அலுவலகாத்தின் பதிவு அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். குறைநிரப்பு வாக்காளர் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்படுதல் தொடர்பாகக் குறிப்பிடப்படும் அனைத்து ஆட்சேபனைகளும் இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதி முதல் அதாவது, 2023, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி முதல் பத்து (10) நாட்களுக்குள் அதாவது, 2023, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

04. உரிமைக் கோரிக்கையைக் கோரும் நபரின் பெயரை குறைநிரப்பு தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் தொடர்பாக தெரிவிக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகளும் உள்ளடங்கிய பட்டியல் மற்றும் உரிமைக் கோரிக்கையை முன்வைப்பவர்களின் பெயர்பட்டியலொன்று அடங்கிய அறிவித்தலொன்று மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட திகதி முதல் 07 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், "ஈ" படிவத்திற்கமைய இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு பதிவு அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இந்த அறிவித்தல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் 2023, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி முதல் பிரசித்தப்படுத்தப்படும்.

05. உரிமைக் கோரிக்கைகளை முன்வைப்பதற்குத் தேவையான “அ”, “ஆ” YC படிவங்கள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்குத் தேவையான “இ”, “ஈ” படிவங்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் அல்லது பிரதேச செயலகங்கள் அல்லது உள்ளூராட்சி நிறுவன அலுவலகங்கள் அல்லது கிராம அலுவலர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,
தேர்தல் ஆணைக்குழு.

இராஜகிரிய தேர்தல்கள் செயலகத்தில்,
2023, ஒற்றோபர் 02.

EOG 10-0005

**அட்டவணை**

| I ஆம் நிரல்<br>தேர்தல் மாவட்டம் | II ஆம் நிரல்<br>2023(1) குறைநிரப்பு தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்திய அலுவலர் |
|---|---|
| 01. கொழும்பு | பீ. ஏ. எஸ். சேனாரத்ன |
| 02. கம்பஹா | கே. ஜே. எஸ். மாதவ |
| 03. களுத்துறை | காலிந்திர ஜயவீர பெர்னாந்து |
| 04. கண்டி | எச். டீ. என். சம்பத் பெர்னாந்து |
| 05. மாத்தளை | எச். ஏ. ஈ. புஷ்பகுமார |
| 06. நுவரெலியா | கே. ஏ. எல். எஸ். கலுகம்பிட்டிய |
| 07. காலி | டப்ளிவ். எச். ஆர். விஜய குமார |
| 08. மாத்தறை | ரீ. டப்ளியூ. போஷிதா கௌமதி |
| 09. அம்பாந்தோட்டை | ரவீந்திர சுபாஷன வெதகே |
| 10. யாழ்ப்பாணம் | ஆர். சீ. அமல்ராஜ் |
| 11. வன்னி | ஜே. ஜெனிட்டன் |
| 12. மட்டக்களப்பு | எம். பி. எம். சுபியான் |
| 13. திகாமடுல்ல | கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க |
| 14. திருகோணமலை | பியுமி ஆட்டிகல |
| 15. குருநாகல் | ஆர். எம். எச். பி. ரத்னாயக்க |
| 16. புத்தளம் | எஸ். எல். ஆர். ஜயநாயக்க |
| 17. அநுராதபுரம் | கே. முகுந்தன் |
| 18. பொலன்னறுவை | பியுமி ஆட்டிகல |
| 19. பதுளை | கே. காந்தீபன் |
| 20. மொனராகலை | என். ரேகன் |
| 21. இரத்தினபுரி | சுரங்க அம்பகஹதென்னெ |
| 22. கேகாலை | சஜித் பீ. கஸ்தூரிசிங்க |

EOG 10-0006

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.